தீ இங்கு எரிவதும் திசை இங்கு சிவப்பதும் மண்ணுக்காக தமிழ் மண்ணுக்காக 2

ஆசைகள் கனவுகள் அத்தனையும் கரைவதும்
ஓசை இன்றி வானத்திலே உயிர் சிறகடிப்பதும் மண்ணுக்காக
தமிழ் மண்ணுக்காக

தீ இங்கு எரிவதும் திசை இங்கு சிவப்பதும் மண்ணுக்காக தமிழ் மண்ணுக்காக

இடி நெஞ்சில் வெடிப்பதும் மின்னல் கண்ணில் தெறிப்பதும் 2
கண்ணில் பொங்கும் துன்பம் வெள்ளம் கரையினை உடைப்பதும் 2
சின்னப் பிஞ்சு நொந்து சீறி மனம் துடிப்பதும் 2

தீ இங்கு எரிவதும் திசை இங்கு சிவப்பதும் மண்ணுக்காக தமிழ் மண்ணுக்காக

நடந்தவர் முடிந்ததும் படங்களில் சிரிப்பதும் 2
தீபம் தரும் வெளிச்சத்தில் தேசத்தினை பார்ப்பதும் 2
பாசம் கொண்ட நெஞ்சினில் தீ மலர் பூப்பதும் மண்ணுக்காக
தமிழ் மண்ணுக்காக

தீ இங்கு எரிவதும் திசை இங்கு சிவப்பதும் மண்ணுக்காக தமிழ் மண்ணுக்காக